னும்நாழிவாரே. (௩௩௬)

வார்த்தேநீபிசைந்துநன்றாய்க்கலசந்தன்னில் வளமாகத்தானடைத்
துவைத்துக்கொண்டு-பார்த்தேநீநல்லநாள்தன்னிற்கொள்ள பாங்காகமு
ள்ளிக்காய்விதமாகச்-சேர்த்தேநீயந்திசந்திநாற்பதுநாளப்பா செயலாகக்
கொண்டிடவேதீரும்நோய்கள்-கார்த்தேநீபத்தியமோ மிளகுகடுகுமாகாக
னிவானவாழையிலேகரப்பான்தள்ளே. (௩௩௭)

தள்ளேயிலேமேகமெல்லாம்பறக்கும்பாருதயவில்லாச்சூலையொடுவி
ரணரோகம் - அள்ளேயிலேகிரந்திவகைவாயின்ரோகம் அடவானகுஷ்ட
மொடுபிரமியங்கள்-தெள்ளேயிலேகுன்மமொடுவாயுமூர்ச்சை தெளிவில்
லாவாய்நாற்றமக்கினிமந்தம்-விள்ளேயிலேபரங்கிப்பட்டைரசாயனந்தான்
விண்ணவர்கள்மருந்துண்ணக்கொள்ளலாமே. (௩௩௮)

சீரகச்சூரணம்.

கொள்ளவேயின்னமொன்றுசொல்லக்கேளு குணமானசீரகமோப்
லந்தானேந்து-தெள்ளவேவாங்கிவந்துபீங்கான்தன்னில் தெளிவாகத்தான்
போட்டுப்பழச்சாற்வாரு-அள்ளவேமிதக்கவிட்டுஊறவைத்து அடவாகவெ
மூல்தனிலேயுலரப்போட்டு-விள்ளவேதானெடுத்துஇந்தப்பாகம் விதமாக
த்தான்போட்டுவிவரம்பாரே. (௩௩௯)

பாரேநீகருப்பஞ்சாற்முசுமுசுக்கை பாங்காகநெல்லிக்காய்ச் சாறுங்
கூட-சேரேநீதூதுவளைச்சாற்றினோடு செயலானவேம்பின்பட்டைச்சாறு
மாகும்-தீரேநீதும்பையிலைச்சாறும்விட்டு திறமாகவெவ்வேறுயுலரப்போ
ட்டு-சீரேநீதூளிடித்துவடிதான்கட்டி சீனியதுகால்பங்கு கலந்துக்கொள்
ளே. (௩௪௦)

கொள்ளப்பாஅந்திசந்திநாற்பதுநாள்கொள்ள குணமாக வெருகடி
தான்விதம்பாரு-தெள்ளப்பாபித்தமெல்லாமகன்றுப்போகும் தெளிவில்
லாக்கிறுகிறுப்புவாந்திதீரும்-உள்ளப்பாஅக்கினிபாமந்தந்தீரும் உஷ்ண
மாங்காங்கையெல்லாமகலும்பாரு-விள்ளப்பாபோகருட்கடாட்சத்தாலே
விதமாகப்புலிப்பாணிபாடினேனே. (௩௪௧)

அரிதாரபற்பம்.

பாடினேனரிதாரப்பற்பந்தன்னைப் பண்பாகச்சொல்லுகிறேன் பரிந்துகேளு-நாடினேனரிதாரக்கட்டிதன்னை நலமானகற்சுண்ணந்தன்னில் நீற்றி-தேடினேன்மேனியிலேக்கல்லுச்சுண்ணம்சேர்த்தரைப்பாய்சமன்கொண்டுமைபோலாட்டி-சூடினேன்கட்டியின்மேல்கவசங்கட்டி சுகமாகமண்சீலைவலுக்கச்செய்யே. (௩௪௨)

செய்யப்பா*குக்குடத்தில்நீறிப்போகுஞ் செயமானபற்பத்தை யெடுத்துக்கொண்டு-வையப்பாசயங்கள்விஷபாகம்பாண்டு வளமான சுரங்களொடுபித்தரோகம்-கையப்பாஎலிக்கடியும்பயித்தியந்தீருங் கருத்தானபற்பமிது அறிந்துக்கொள்ளு-நீயப்பாபோகருடகடாட்சத்தாலே நிச்சயமாய்வயித்தியத்தைச்செய்துபாரே. (௩௪௩)

* குக்குடம்-கோழியளவுபுடம்.

சகலரோகத்துக்குஞ் சூக்ஷகுளிகை.

பாரடாரசமும்*திரிபாலைகெந்தி பண்பானமிளகுடனேகடுகுஞ்சேர்த்து-நேரடாபொடியாக்கிப்பனையின்வெல்லம் நேர்சேர்த்துச்சுண்டக்காய்ப்போலேயுண்டை-வீரடாவொருவுண்டைவுதயந்தன்னில் விழுங்கிவிட்டுக்கடிகையாநேரஞ்சென்று-சீரடாஆவின்பால்படியுங்நால்தான் சிறப்பாகத்தான்குடிப்பாய்திண்ணந்தானே. (௩௪௪)

* திரிபாலை-கடுக்காய்-தான்றிக்காய்-நெல்லிக்காய்.

தானேதானிந்தவிதம்நாற்பத்தெட்டு தயவாகநாட்கொள்ளத் தீரும்நோய்கேள்-மானேதான்குஷ்டமொடுகுன்மஞ்சூலை மைந்தனேபெருவயிறும்பிரமைபித்தம்-கோனேதான்குராநோவுசொரியுமாறும் கொடிதானபித்தியந்தானில்லைப்பாரு-நானேதான் போகருடகடாட்சத்தாலே நலமாகப்புலிப்பாணிபாடினேனே. (௩௪௫)

பித்தபயித்தியத்துக்கு - பற்பம்.

பாடினேன்நாய்மண்டைமாட்டுமண்டை பாங்கானமனுஷ்ருட மண்டையோடு-நாடியேசரியெடையாய்க்கல்வத்திட்டு நலமானகழுதைப்பால்தன்னாலாட்டி-ஆடியேமைபோலவழித்தெடுத்து அடவாகவில்லைதட்டியுலரப்போட்டு-தேடியேகுக்குடத்திற்புடத்தைப்போடு தெளிவாகப்பற்பமது*தவளமாச்சே. (௩௪௬)

* தவளம்-வெண்மை.

ஆச்சப்பாகழுதைப்பால்துட்டெடைதான்ரண்டு அடவானஇஞ்சிச்சாற்றுட்டெடைதான்விட்டு-வாச்சப்பாசர்க்கரைதுட் டெடைதான்போட்டு வளமானபற்பமதுகழஞ்சிகூட்டி - யேச்சப்பாகொடுத்துவிரோராறு

வேளை யெழுந்தபித்தபயித்தியமும்பிரமையேவல்- போச்சப்பாதேவதை களிதற்கோவிடு புதைபில்லிவைப்புமுதல்தீருந்தானே. (௩சள)

பில்லிபயித்தியத்துக்கு.

தானென்ற சமுதையுடஇடபாகத்தில் தான்வளர்ந்தசடையுடனே பாம்புசட்டை-மானென்றவேப்பெண்ணெய்செஞ்சீலைசுற்றிமைந்தனேசுட்டொன்றதயிலம்வாங்கி- கோனென்றவுள்ளுக்குக்கரண்டிவீதம்கொடுத்திடுவாய்மூன்றுநாளாறுவேளை- தேனென்றமேலுக்கும்பூசுபூசு தெளிவாகும்பயித்தியம்பில்லினுளாறே, (௩சஅ)

சகலரோகத்துக்கும்சித்திரமூலயெண்ணெய்.

ஆறுதருட்டுக்குளெண்ணெய்சொல்வேன் அடவாகளள்ளெண்ணெயாவினெய்யும், கூறுதவகைக்குவகைப்படிதான்பாதி கொடிதானசித்தருட * மூலப்பட்டை, நேராத பலமொன்றுநீர்விட்டாட்டி நேராகஎண்ணெயிலேகலக்கிப்போட்டு-மீறுதமெழுகுபதந்தனிலிறக்கி மிஞ்சாமல்துட்டெடைதான்கொண்டுபாரே, (௩சகூ)

*மூலப்பட்டை-சித்திரமூலப்பட்டை,

பாரோநீநாற்பதுநாள்கொண்டபோது பாங்கானசூட்டெங்கே மேகமெங்கே, வீரோநீவிப்புருதிகண்டமாலைவிதமானபுண்புரைகள் சிரங்குந்தீரும் தீரோநீவாயுவொடுசூலைக்குத்து திறமானசெங்கிரந்தித்தடிப்புமாறும், சேரோநீபத்தியந்தா னிதற்கோஇல்லை செயலானபோகருடகடாட்சந்தானே

ஆக்கிராணம்.

தானான ஆக்கிராணஞ்சொல்வேன்கேளு தயவானசுண்டைவேர்சித்திரமூலம்-வானான அழிஞ்சிவேர்கண்டங்கத்திரி வளமானதூதுவளைமிளகருணைவேளை - மானான ஆடுதொடாகுப்பைமேனிவளமானவெள்ளைச்சாரணையும்வேலி-பானானவகைக்குவகைவிராகனென்றுபண்பானவெருக்கிலையின்சுணையும்பாரே. (௩டுக)

பாரோநீசமுத்திராப் பழமுஞ்சுக்குபாங்கான அக்கிராகாரம்ஓமம்,சேரோநீ அதிவிடையம்* அரத்தை* காயஞ் செயலானதிப்பிலியுந்திப்பிலிமூலம், வீரோநீதேசாவரங்கஸ்தூரிமஞ்சள் வீறுனவால்மிளகு கடல்நுரையுங்கடுகு-தீரோநீகுராசானியோமம்* ரோகணி திறமானகருஞ்சீரம் பேராத்தைகாணே, (௩டுஉ)

* அரத்தை-சிற்றரத்தை*காயம்-பெருங்காயம்

* ரோசணி-கடுகுரோகணி,

காணேநீவசம்புவெப்பாலரிசியோடு கனிவானசாம்பிராணிவகைவகைக்கு, தானேநீவிராகனெடைநிறுத்துக்கொண்டு தயவாகச்சரக்கெல்லா

மொன்றுய்க்கூட்டி-பானேநீயத்தியின்பால்வெள்ளாட்டுநீரும் பாங்காகப் பிசரிவைத்துலர்த்திக்கொண்டு - மானேநீபொடித்துபேய்ச்சுரைக்குடுக்கை மைந்தனேதுளடைத்துவைத்துக்கொள்ளே- (௫௫௩)

கொள்ளவே பணவெடை தானுசிக்கேற்ற கொற்றவனேசன்னியதுவில கும்பாரு, அள்ளவேகாகிதத்தில்வைத்துச்சுற்றி அடவாகநிம்பஎண்ணெய்தனில்துவைத்து-மெள்ளவேபொருந்தியதையாற்றிப்போட்டு மேன்மையாய்ப்புகையதனைநாசிக்கேற்று-தள்ளவேசிரசிலுள்ளவியாதிதீருந் தலைவலியுமொருதலையு மிடிப்புபோமே (௫௫௪)

போமேநீர்ப்பாய்ச்சல்சயமும்பித்தம்பொல்லாதகபாலத்தின்சூலைவாயு, ஆமேநீபீநசமுஞ்சகலதோஷம் அட்வானமண்டைக்குத்துகெர்ப்பநோயுந், தாமேநீசிரசிலுள்ளவியாதிக்கெல்லாந் தாக்கடாஇப்புகையைச்சண்ணுஞ்சண்ணும், மாமேநீயின்னமொருசூட்சஞ்சொல்வேன் மாறுதரணங்களுக்குவழுத்துறேனே, (௫௫௫)

இரணங்களுக்குப்புகை.

வழுத்துறேன்கண்டத்தின்மேலேயுள்ள வாயுமுதல்கண்செவியின்நோயுந்திரும், பழுத்துறேன்பற்கிட்டு சன்னிதோஷம் பாங்கானமுனிகருப்பெதுவானாலுங், கொழுத்துறேன்பணவெடை ஆக்கிராணத்தோடேகுணமானநவாச்சாரநேரோசேர்த்து-சுழுத்துறேன்கற்சுண்ணங்கொஞ்சங்கூட்டிச்சுறுக்காகமத்தித்துநாசிக்கேற்றே (௫௫௬)

ஏற்றேநீஆக்கிராணங்கழஞ்சியொன்று இதமான அரிதாரம்லிங்கம்பூரம்-பார்த்தேநீகொடிக்கள்ளிப்பட்டைத்தூளும் பாங்கானசமுதைலத்திபொடியுமப்பா-போற்றேநீவகைவகைக்குகழஞ்சிஒன்றுபொங்கமுடன்திருகுகள்ளிப்பாலாலாட்டி- சேர்த்தேநீயுலரவைத்து எடுத்துக்கொண்டு செயமானபுங்குபுளி தன்னிற்கேளே (௫௫௭)

கேளேதான்தணலிலே பொடியேபோட்டு கெடியானபுண்களிலே புகைதான்சார, சூளேதான்வெடிசூலைமேகவெட்டைசுடுகிரந்தியனையாப்புபௌத்திரங்கள், கோளேதான்இப்புகையில்தீரும்பாரு கொற்றவனேபொடியெடுத்துஅலரிப்பாலில்,நாளேதான்மத்தித்து இரணத்தில்போட்காயகனேரணங்களெல்லாந் தீருந்தானே (௫௫௮)

சூட்டுக்குமுழுகத்தாமரைத்தயிலம்.

தானான எள்ளெண்ணெய்ப்படி தானென்று தகைமைகுளிர் தாமரைச்சாற்படிதானென்று-பானானபதந்தனிலே காய்ச்சியப்பா பக்குவமாய்க்கீழிறக்கித்தானேவைத்து-மானானபூலாக்கிழங்குப்பச்சிலையுமப்பா வகைவகைக்குவிராகனேந்துநிறுத்துக்கொண்டு,தேனாகப்பொடிபண்ணித்தாவிப்போடுதெளிவாகவடித்திறுத்துமுழுகுவாயே, (௫௫௯)

மூழுகயிலேசூடெல்லாந்தணிந்துப்போகு மூன்னிலையாக்கண்ணெ ரிவுகுளிர்ச்சியாகும்-பழுகாதுகிரோகமது பொன்போல்மின்னும்பண்பா ணநீர்க்கடுப்புவினையுந்தீரும், அழுகாதுவிந்துவங்கே இறுகும்பாருஅட்டவா கமூலத்திற்சூடும்போகும்,நழுகாதுசூலையுடகருணைவாங்குந்நலமானபோ கருட்கடாட்சந்தானே, (கசுo)

வைத்தியமுப்பு,

தானானவைத்தியமுப்புமார்க்கம் தயவாகச்சொல்லுகிறேன் தரும மாக, கோனானபங்குனிசித்திரையில்பூநீர்க் கொற்றவனேமண்படாதெடு த்துவந்து-மானானநாலுபடிபாண்டத்திட்டு மைந்தனேகடலுப்புபடிதான் ரண்டு-வானானகற்சுண்ணம்படிதான்ரண்டுவளமானஅமுரியதுபடிதானெ ட்டே, (கசுக)

எட்டுதான்வார்த்தபின்புஎள்ளெண்ணெயப்பா இதமாகப்படிஅ ரைதான் அளந்துவாரு, தொட்டுதான்கலக்கியதைத்தெளிவிறுத்துதோ ண்வேஉப்பாகுமட்டுங்காய்ச்சி, விட்டுதான் அமுரிபடியெட்டேவிட் டுவிதமாகஇவ்விதமாய்ப்பத்துமுறைக்காச்சு, பட்டுதான்குழம்பதுபோ லாகும்பாரு பாங்கானஎருச்சாம்பல்சொல்லக்கேளே (கசுஉ)

கேளேதான்எருச்சாம்பல் பரப்பிமைந்தா சொணிதமுடன்சல்லா வைவிரித்துப்போட்டு, நாளேதான்இதில்வாருஇறுகும்போது நலமாகஉ ண்டையதாயுருட்டிப்போடு, சூளேதான்ரவியில்வைத்துஎடுத்துக்கொண் டுசுகமாகநெற்பிசரிஒருபாண்டத்தில்-வாளேதானதைப்பாண்டமதனில்வி ட்டுவளமாகஅதன்மேல்மல் லிகையினிலையே, (கசுங)

மல்லிகையினிலைபரப்பிபிந்தஉண்டைமைந்தனேமேல்வைத்துஇலே யால்மூடி, அல்லியேயதின்மேலேநெல்லிட்டப்பா அட்வாகச்சட்டிமூடி யெரியவைநீ. வல்லியேநெல்லுவெந்தபின்னெடுத்துவைத்துவளமாகச்சி ப்பிநூமிறச்சியொக்க, கல்லிலேதுவாரமிட்டுச்சொல்லக்கேளுகருத்தாக *வீரம்*பச்சைப்பூரந்தானே (கசுச)

*வீரம்-சைவீரம்,

* பச்சைப்பூரம்-பச்சைக்கற்பூரம்,

தானானபூரமுடன்பூநீறப்பா தயவாகவகைவகைக்கு விராகன்மூன் று- கோனானஇவைநான்கும்பொடியாய்ச்செய்து கொற்றவனேசிப்பியுட் துவாரந்தன்னில்-மானானசிப்பிதொறுங்கொஞ்சம்போடு மைந்தனேசிப் பிபின்மேல்பரப்பிவைத்து-பானானசெயநீரும்இரங்கும்பாரு பாங்காகஇ தையெடுத்துப்பதனம்பண்ணே (கசுரு)

பண்ணப்பாநாதவிந்துரண்டுதானும் பண்பானஇளநீருஞ் சமனாய்ச்சேர்த்து-நண்ணப்பாபாடுவெண்டுஉரமுஞ்சூதம்நலமாகக்கருநாபிபச்சைபூரம், உண்ணப்பாஆறுபுள்ளிவண்டின்முட்டைஉத்தமனேசினமுடன்*சாரமப்பா வண்ணப்பாவகைவகைக்குப்பணவெடைதான்வீதம் வகையாகப்பொடிப் பண்ணியிளநீரிற்போடே (௫௬௬)

* சாரம்-நவட்சாரம்,

போடேதான்தெளிவிறுத்துண்டைதன்னைப் பொங்கமுடனிளநீரால்சாமமாட்டி, யாடேதான்வில்லைதட்டி ரவியிற்போட்டு அடவாகக்காய்ந்தபின்பு சொல்லக்கேளு- நாடேதான்பேரண்டம்பொடிபதாக்கிநலமாணஓட்டின்மேல்பரப்பிவைத்து, கூடேதான்அதன்மேலேவில்லைவைத்து குணமாகஅதன்மேலேபொடியைப்போடே, (௫௬௭)

போடப்பாமேல்மூடிச் சீலைசெய்து புனிதமுடன்பத்தெருவில்புடத்தைப்போடு, காடப்பாஇம்முறையால் ஐந்துபோடு கசடறவே சுண்ணமாயிருக்கும்பாரு, பாடப்பா*பேரண்டஞ்சிற்றண்டத்தோடு பாங்கானசிப்பியுநண்டோடுநத்தை- மாடப்பாஇதையெல்லாம்வெவ்வேறாகமைந்தனே*சிற்றண்டக்கருவாலாட்டே, (௫௬௮)

* பேரண்டம்-தலைவோடு,

* சிற்றண்டம்-கோழிமுட்டை,

ஆட்டியேஉலரவைத்துஉலைபிலூத அப்பனேஅஞ்சுந்தான்சுண்ணமாகும், நாட்டியேஅஞ்சுசுண்ணஞ்சமனாய்க்கூட்டி நலமாகமுன்விட்டசெயநீர்விட்டு-கூட்டியேதானரைத்துக்*குகைபிடித்துக்குணமாகச்சில்லுசெய்துமுன்சுண்ணத்தை-வாட்டியேசெயநீரால்மைபோலாட்டிவளமாகத்தான்ரவியிலுலரப்போடே, (௫௬௯)

* குகை-மூசை,

போடேநீஅஞ்சுசுண்ணக்குகையில்வைத்து போதகமாயஞ்சுசுண்ணஞ்சில்லுப்போட்டு - ஆடேநீசுண்ணாம்புச்சீலைசெய்துஅடவாகப்புடம்போட்டுஎடுத்துக்கொண்டு-நாடேநீஅஞ்சுதரமிந்தப்பாகம் நலமாகப்புடம்போட்டுஎடுத்துக்கொண்டு-மாடேநீநாதாக்கள்சாபந்தீர மைந்தனேஆத்தாளைப்பூசைபண்ணே- (௫௭0)

பண்ணவேசுண்ணத்தால்சுண்ணமாகும் பாங்கானசிந்தூரம்மெழுகுமாகும்-நண்ணவேகட்டினமுமுருக்கினமுமாகும் நலமானசரக்கெல்லாம்பற்பமாகும், உண்ணவேலேகியங்கள்கிருதம்எண்ணெய்உத்தமனேயவிழ்தமென்றவகைகட்கெல்லாம்-எண்ணவேபணவெடைதான்கூட்டவேண்டுமில்லாவிட்டாலவிழ்தமது வீரில்லாதே. (௫௭௧)

இல்லாதநோய்கள்தான்சடத்தில்மேவும் ஏதென்றால்பஞ்சபாதகத்தால்காணும், பொல்லாதகர்மவினைதீரவேண்டிப் பூட்டுகிறேன்சாந்தியொ

ன்றுசொல்லக்கேளு,வல்லானஓடிநீர்கலசந்தன்னில் வளமாகக்கொண்டுவெ
ந்துதர்ப்பைப்போட்டு- சொல்லானகலசத்தைமேலேவைத்துச்சொகுசா
ன* அக்குமணிசேர்த்துக்கட்டே. (௩௭௨)

* அக்குமணி-பலகறைமணி-

கட்டப்பாமாவிலையைமேலேவைத்து கலவானமஞ்சளைத்தானைத்
துவப்பி, பட்டானமுக்கோணக்கலசத்துள்ளே பாங்காகத்தானிட்டுசிகா
ரம்நாட்டி- மட்டானசோயாளிதன்னைத்தானு மன்னவனேமுன்னேவைப்
பாய்மதியந்தன்னில்- வட்டப்பாதூபமொடுதீபங்காட்டிவளமானவில்வ
மதுநூற்றெட்டாமே. (௩௭௩)

ஆமப்பாஓமமொன்று அர்ச்சனையுஞ்செய்து அடவாகக்கலசநீர்சிர
சில்வார்த்து- தாமப்பாஒருசிறங்கையுள்ளுக்கீந்து தயவாகவில்வமதுமூ
ன்றுநாள்கொண்டால்-ஓமப்பா* அருக்கன்முதல்சனிநாள்மட்டுமொடுக்க
மாயிப்படியேசெய்தாயானல்,போமப்பாபஞ்சபாதகங்களியாவும் பொல்
லாதபிரமைபிணியேவல்போமே. (௩௭௪)

* அருக்கன்-ஞாயிற்றுக்கிழமை,

நோய்க்கும்பேய்க்கும்ஓமசாந்தி.

போமேதான் ஓமத்தின்சாந்திகேளு பொங்கமுடனேந்துபடியரிசிக்
கொட்டி-ஆமேதான்பச்சரிசிமேலேகேளு அடவானதிரிகோணம்விந்துப்
போட்டு- தாமேதான்றீங்காரமுள்ளேபோட்டுதயவாககும்பமைந்தில்த
னிநூல்சுற்றி-வாமேதான்சலமதுதானிறையவிட்டுவளமானசொர்னமொ
ன்றுகூடப்போடே- (௩௭௫)

போடப்பாஇருபத்தைந்தரையு மாறிப்பொங்கமுடன்மாவிலையுந்தே
ங்காய்வைத்து, ஆடப்பாசந்தனத்தைக்கரைத்துச்சாத்தி * அட்சதையுஞ்
சுகந்தபரிமளங்கள்பூசி- நாடப்பாபட்டுவஸ்திரங்கள்சாத்திநலமானபுட்ப
மர்ச்சனையேசெய்து, ஈடப்பாபழந்தேங்காய்தாம்பூலங்கள் இதமானபல
காரமிளநீர்பாலே (௩௭௬)

* அட்சதை-மஞ்சளரிசி.

பாலுடனேபானக்கம்வஸ்துபோடு பரமானம்அவலுடனே*சுத்திய
ண்டம்- ஏலுடனேபொரிகடலைசர்க்கரைமாவிளக்கு இதமானவெண்ணெ
ய்பொங்கல்பசும்பருப்பு- சேலுடனேயித்தனையுமிலைதான்போட்டுசெப்ப
முடன்பரிமாறித்தூபம்போடு- மாலுடனேஓமகுண்டஞ்* சமிதைகேளு
மைந்தனேமாவிலிங்கம்விளாத்தியாமே. (௩௭௭)

* சுத்தி-மாங்கிஷப்பொரியல்.

* சமிதை-சுள்ளிவிறகு,

ஆமேசீவில்வமொடெட்டிநொச்சி அடைவானமாவோடுஓமம்செய்யா ம்-தாமேசீரம்-அக்கினிநமாவென்றேதான் தயவாகச்சமித்துக்காயிரத்தெ ட்டோதி-போமேசீயெள்ளுழுந்துகடலைமொச்சைப் பொலிவானதுவரை பசும்பயற்றினோடு- வாமேகாராமணியும்*அரிகோதும்பை வளமாகஓன் பதையும்ஓமம்பண்ணே, (கூஎஅ)

* அரி அரிசி,

பண்ணப்பாதேன்பாலுவஸ்துசுத்திப்ப்ரங்கானபழந்தேங்காய்பலகா ரங்கள், நண்ணப்பாஇளநீர்ச்சர்க்கரைபானக்கம் நலமானதயிர்சோறுநெ ற்பொரியுங்கூட, வண்ணப்பா அக்கினிக்காகுதியேபண்ண வஞ்சனையுமு றைப்பாடுந்தேவர்குற்றம் ஒண்ணப்பா அசுத்தசுத்தகணமும்பூதம் உத்த மனேபஞ்சபாதகமும்போமே. (கூஎகூ)

போமடாபில்லிவஞ்சனையும்ஏவல் பிரமையொடுவியாதிமுதல்பசா சுபேயும், ஆமடாமுனிகறுப்புலாடன்காட்டேரி அடைவானபேய்ச்சிகந்து ருவர்மூர்த்தி, தாமடாசாத்தனொடுஇருளனயன்தயவில்லாச்சப்பாணியி ருதலைபின்கொள்ளி, ஓமடாயின்னம்வெகுபசாசானும் ஓமத்தில்ஓடிவி டுங்கண்டுபாரே, (கூஅ0)

கண்டுநீ* கும்பமைந்துதூபதீபங் கனிவாகத்தான்கொடுத்து சேர் டசமுஞ்செய்து-பண்டுமுன்னேகோயாளிதனக்குமப்பா பாங்காகக்கலச நீர்சிரசில்வார்த்து-கொண்டுவெல்லோர்அவிழ்தங்கள்கொடுக்கச்செய்நீகுற் றமெல்லாந்தான்தீர்ந்துவியாதிபோகும்-தொண்டுசெய்வாரனவோருஞ்ச மர்த்தனென்றுதொல்லுலகில்செல்வமதாய்வாழ்வார்தானே (கூஅக)

கும்பம்-கலசம்-

கழிப்புச்செய்யும்விதம்.

தானென்றகழிப்புக்குச்சொல்லக்கேளுதயவாகப்பச்சைமாப்மாவைச் செய்து- வானென்றபுதுமுறத்துக்குள்ளேவைத்து வளமாகஆபரணந்த ன்னைப்போட்டு-கோனென்றமுப்பத்திரண்டுதீபங்குறையாமல்நவரத்நஞ் சொர்னம்வைத்து- வானென்றவஸ்திரங்கள் பரிமளங்கள்சாத்திமைந்த னேசுகந்தபுஷபம்வாடைதூவே. (கூஅஉ)

இரத்தசாமுண்டி-சக்கரம்.

தூவடாரத்தசாமுண்டிசக்கரந்துலங்கவேபாவைமுன்னே எண்கோ ணம்போட்டு- மாவடாதானெடுத்துரேகைபோட்டு மைந்தனேஎட்டா

யில்கரியேதூவு-நாவடாநாலணையினுட்கோணத்தில் நலமானதிருச்சூரணந்தன்னைத்தூவு-வாவடாஉட்சதுரம் மஞ்சள்தூவுவளமானமுக்கோணம் பச்சையாமே, (௩௮௩)

ஆமேதான்முக்கோணம்ஸ்ரீங்காரம்போடு அட்வானநாலணையில்-அம்-ஓம்-தம்-தம்-மென்று-தாமேதான்நாலணையில் ஓங்காரம்கட்டித்தலைசுழித்துச்சூலமிட்டுதயவதாக-வாமேதான்கருப்புவண்ண அணாகளெட்டும்-வளமாக-அ-ஆ-இ-ஈ-உ-ஊ-எ-ஏ-என்ன-போமேதான் எட்டுமுனைசூலம் போடு பொங்கமுடன் களபமுதல்சுகந்தஞ்சாத்தே, (௩௮௪)

சாத்தப்பாஎட்டுமுனைச்சக்கரத்தில்மூன்று சார்வானபழந்தேங்காய்தாம்பூலங்கள் - மாத்தப்பாபல்காரவகையுமன்னம் வஸ்துசுத்திகடலைபொரியண்டத்தோடு-போத்தப்பா இளநீர்தேன்பானக்கம்பால்பொங்கமுடன்மஞ்சள்நீர்கரிதண்ணீரும்-ஏத்தப்பாகடலைமொச்சைப்பயறுசுண்டல் இதமாகவெண்ணெயுஞ்சர்க்கரையும்வையே. (௩௮௫)

வையப்பாபச்சைமாவிளக்கிஞேடு வளமாகஇத்தனையும்முன்னேவைத்து-கையப்பாபுதுப்பானைவாயைத்தட்டி கனிவானசுண்ணும்பைமேலேபூசி-பையப்பாகரிபொட்டுமேலேகுத்தி பாங்காகப்புழுங்கரிசிச்சோற்றைப்போட்டு- மையப்பாஉழுந்தென்றபருப்புங்கூட மைந்தனேகத்திரிக்காய்கருவாட்டாமே, (௩௮௬)

ஆமேநீமுருங்கக்காய்மொச்சைச்சாறு அட்வானபுண்ணுக்குக்கீரையோடு-வாமேநீவஸ்துவுடன்சுத்திகூட வளமானபஞ்சவண்ணச்சோறும்வைத்து, தாமேநீபழந்தேங்காய்தாம்பூலஞ்சுற்றித் தயவாகவெட்டிவிட்டும்பாவைமுன்பு-போமேநீயெட்டிமாவிலிங்கம்ரண்டும் பொங்கமுட*நிம்பஎண்ணெய்முளகாயாமே. (௩௮௭)

* நிம்பஎண்ணெய்-வேப்பெண்ணெய்,

ஆமப்பாசெர்ர்னபுஷ்பமவர்க்குவைத்து அடவானதீபமொடுதூபங்காட்டி.-தாமப்பாசோடசோபசாரஞ்செய்துதயவானநைவேத்தியமானபின்பு-வாமப்பாபாவையைத்தான்தலையைச்சுற்றிவளமாகவட்டையுந்தான்தலையைச்சுற்றி- போமப்பாகாடுதனில்மயானந்தன்னில்பொங்கமுடன்முப்பலியுங்கொடுத்துவையே, (௩௮௮)

வைத்தவுடன்பில்லிசூனியங்களேவல் வலுவானபேய்பூதங்கறுப்புமாடன்- இத்தமுடன்முனிவீரன்இருள்காட்டேரிஇதமானமலுக்குடனே

சின்னுபீரும், பத்தவுடன்பிரமராட்சதையும்பேயும்பாங்கானசாத்தனெ டு மாடன்பின்னும்- கத்தவுட்னிருதலையின்கொள்ளியோடுகெருமுறையுந் தேவதைகளோடிப்போமே, (ருஅகூ)

சிதம்பரமெழுதிக்கட்ட.

போமேநீசிதம்பரத்தையெழுதிக்கட்ட போகுமடாநோய்பிணியும் பஞ்சபாவம்,ஆமேநீபிராமணர்க்கு அங்கம்போடு அபிஷேக*சங்கார்க்குதீ பம்ஏற்று, தாமேநீமயேஸபரற்குப்பூசைசெய்நீ தயவுடனேநந்திக்குச்ச லத்தைவாரு, வாமேநீயரசுடனேவேம்புசுற்றிவயிரவற்குவடமாலைசாத்த னன்றே, (ருகூ0)

பில்லிவஞ்சனைநோயுந்தீர்ப்பதற்குகிரியை.

நன்றானபில்லிவஞ்சனையுநோயும் நாயகனேதீர்ப்பதற்குச்சொல்லக் கேளு குன்றுதமாவிலிங்கங்குப்பைமேனி குணமாகமுடக்கற்றான்இது தான்மூன்றும், பண்டாகவகைவகைக்குப்பலம்பத்தாகப் பாண்டத்திலத னைவிட்டுத்துணிநீரில்-துண்டாகவேகவைத்துவிரல்பொறுக்கத்தும்பைம லர்மேலிட்டேபிணிகள்போமே, (ருகூக)

வேதுதண்ணீர்

போமேநீபூவரசுஆலின்பட்டை பொங்கமுடன்கடப்பன்பட்டைமூ ன்றுமாக,ஆமேநீவகைவகைக்குப்பலந்தான்பத்து அட்டவாகத்துணிநீர்த ண்ணீர்காய்ச்சித்-தாமேநீமேலிட்டேபிணிநோய்தீருந்தயவானபில்லிவஞ் சனையுந்தீரும் -போமேநீஅறுகம்புல்சம்புகோரைபுகழ்பெறவேமுன்போ லேபிணிகள்போமே, (ருகூஉ)

ஏவல்தீர்க்க

போமடாகண்டகத்திரியின்மூலம் பொங்கமுடன்காட்டுச்சீரகத்தின் மூலம், வாமடா*பிரமராக்ஷதையின்மூலம் வகைவகைக்குப்பலம்நூறு நிறுத்துக்கொண்டு-தாமடாவெவ்வேறுபாண்டத்திட்டுத் தயவானதுணிநீ ர்தன்னைவார்த்து -நாமடாவெந்திறக்கித்தினமொன்றாக நலமாகத்தான்வா ர்க்கஏவல்போமே, (ருகூ௩)

* பிரமராட்சதையின்மூலம்-பிரமராக்காச்சிவேர்.

இரத்தசாமுண்டிமந்திரம்,

போமப்பாரத்தசாமுண்டிமந்திரம் பொங்கமுடன்முன்னுகச்சொல்ல வில்லை,ஆமப்பாஓம்ரீயும்ரத்தசாமுண்டி அருதுருமடிமடிசித்தி குருகுரு சுவகாவென்று அடவாகச்சககரத்திலாயிரந்தானேது,நாமப்பாபில்லிவஞ் சனையும்நோயும் நலமானதேவரொடுகணங்கள்பூதம், வாமப்பாபஞ்சபா தகங்கள்யாவும் வலுவானராட்சதையும்விலகுந்தானே, (ருகூச)

ஆடாதபேய்ஆட.

தானென்ற*பேய்மிரட்டியிலேயின் தூளுந்தலைப்பிள்ளைக்கொடி தூளுஞ்சமனுப்சேர்த்து-பானென்றஇவையுடன்சாம்பிராணிசேர்த்துப் பாங்காகப்புகைபோடப்பசாசுஆடும்-கோனென்றஓ வாவா-வென்றுஓத கொற்றவனேபூதமெல்லாமாடும்பாரு - தேனென்றபோகருட்கடாட்சத்தாலே தெளிவாகப்புலிப்பாணிபாடினேனே. (ருகூரு)

* பேய்மிரட்டி-கிலுகிலுப்பை.

கணங்கள்பில்லிவஞ்சனைபோகதீபம்.

பாடினேன்மேனிவேர்*முட்டையோடு பாங்கானகழுதையுட்தண்டுங்கூட்டி-நாடினேன்கருச்சீலைதனில்சுருட்டி நற்கழுதைநெய்யாதல் வேப்பெண்ணெயாதல்-கூடினேன்சிரசோடுகிளிஞ்சியாதல்குணமாகத்தீபமிட்டுப்பார்க்கும்போது- ஓடினேனென்றுசொல்லிக்கணங்கள்யாவும் உத்தமனேபில்லிவஞ்சனையும்போமே. (ருகூசு)

* முட்டை-எருமுட்டைப்பிராதி.

பயித்தியத்திற்கு.

போமடாகோசலமும்பசுவின்பாலும் பொங்கமுடன்கரிப்பான்சாற்றுசுருசுக்கை-தாமடாவகைவகைக்குப்படிதானென்று தயவானஎள்ளெண்ணெய்ப்படிதானென்று - ஆமடாகடுகுபதந்தன்னிற்காய்ச்சி அட்வாக மூழ்கிவரப்பிரமைபித்தம்-சாமடாபயித்தியஞ்செய்வினையுந்தீருஞ் சற்குருவாம்போகருடகடாட்சந்தானே. (ருகூஎ)

சகலபேய்க்குங்குளிசம்.

தானப்பாபிரமராட்சதையின்பூடு தயவாகவெள்ளிநாள்காப்புக்கட்டி-வானப்பாபஞ்சவண்ணநூலினாலே வளமாகத்தான்கட்டிகோசலத்தைவாரு-மானப்பாஎட்டுநாளந்திசந்திமைந்தனேவார்க்கையிலேதியானமோது-ஆனப்பாஅரிபிரமராட்சதைநீயென்றும் ஆநந்தவல்லியென்றும் நூற்றெட்டோதே. (ருகூஅ)

ஓதடாமுப்பலியும்பொங்கலிட்டு உத்தமனேநடுச்சாமந்தன்னில்தானும்-வாதடாதிருவாணருபங்கொண்டு வண்மையுடன்ஆணிவேரறுமல்நீயும்-ஆதடாயெடுத்துவந்துகுளிசங்கட்ட அடவானபிரமராட்சதையுமேவல்-நாதடாமுனிகறுப்புப்பேயின்பூதம்நலமானதேவனேடுஓடிப்போமே

பேய் பூதம் ஓடிப்போக-மை

போமடாஇன்னமொருமையைக்கேளு பொங்கமுடன்பன்றியுடமூ
ஞ்சியொன்று-ஆமடாநாய்ப்பல்லுபுலியுண்ணுர்கு அடர்கழுதைமண்டை
கரும்பூனையீரல்-வாமடாமனுஷர்மலந்திட்டுச்சிலே வளமாகநொருக்கியப்
பாபாண்டத்திட்டு-தாமடாகுழித்தைல*மாவாணைகாஷ்டத் தாலெரித்துக்
குப்பியிலேஅடைத்துக்கொள்ளே. (௪00)

* ஆவாணைகாஷ்டம்-ஆவாணைவிறகு.

கொள்ளப்பாமயானத்திற்பாழ்வீடாதல் சோரிவிடுகுட்டிச்சுவர்தன்
னிலாதல்-வள்ளப்பாவஸ்துடனேநெற்பொரியும்வைத்து வளமில்லாஎரு
க்கம்பூ அரும்பினுலே-மெள்ளப்பாநூற்றெட்டுருத்தானோது மேன்மை
யாய் அக்காளைத்தியானித்துநீ-அள்ளப்பாதூம்-தூம்- தூசி-தூசி - சீ-சீ-
போ-போ-வென்று அடவாகத்தபிலத்தினருமைபாரே. (௪0௧)

மாரோநீநிலர்தமிடப்பில்லிவஞ்சனை பறக்குமடாதேவரொடுகணங்க
ள்பூதம்-சேரோநீமுனிகறுப்புபேய்பசாசு சேரில்லாச்செய்வினையும்பயித்தி
யந்திரும்-சீரோநீநெரிகட்டால்வாசல்மேலே செயலாகப்பொட்டிடசொற்
பனங்கள்கோடி-வேரோநீவெடியிடுக்கில்தடவினுக்கால் வீரான குமிமுகந்
தான்சொல்லநன்றே. (௪0௨)

சொல்லானவெடிப்பிருந்தபொட்டினாலே சொற்பெரியசொற்பனங்
கள்திரவேண்டில்-அல்லானபொட்டைமிகச்சுரண்டியப்பா அடவாகமுற
ந்தனிலேசிந்தாமற்றான்-வல்லானசாணியிட்டுமெழுகிநன்றாய் வளமாகப்
பசுவின்பால்கொண்டுதேய்நீ-செல்லானவல்லாங்கால்பட்டாகிலத்தில்சூணை
யாய்க்கொட்டிவிடுசொற்பனங்கள்போமே. (௪0௩)

அக்கினிபிளாஸ்திரி.

போமென்று அக்கினிபிளாஸ்திரியைக்கேளு பொங்கமுடன்மெழுக
துவும்விராகன்பத்து - ஆமென்றுபாண்டத்திலிட்டுமைந்தா அடவாகவிர
ணமைந்துபொடித்துப்போடு- தாமென்றுவுருணையிலேவிளக்கெண்ணெய்வி
ட்டுத் தானுருக்கிவடிகட்டிச்சலத்தில்வாரு-வாமென்றுதனையெடுத்துச்சி
மிழில்வைத்து வளமாகச்சல்லாமேல்தடவிவையே, (௪0௪)

தடவிபேகைக்கால்குத்தெடுக்குந்தேகந் தயவாகஎலுமிச்சம்பழச்சா
ற்றூசி-அடவியேசாரத்தைப்பொடித்துத்தூவி அடவான பிளாஸ்திரியை
அளவாய்ப்போட்டு-மடவியேகட்டிடவே பொறுக்கொணாத மயக்கமுஞ்
சோபங்கண்டாலவிழ்த்துப்போடு-கடவியேகொப்பளித்துச் சலமதாகுங்
கத்தரித்துவிட்டுவிடுநீருபோமே. (௪0௫)

இரணமாறுகிறபிளாஸ்திரி.

போமேநீவலிக்குத்துத்தீர்ந்துபோகும் பொங்கருடன்ரணமாறப்பி ளாஸ்திரிசொல்வேன்-ஆமேநீவெள்ளையென்றகுங்கிலியந்தன்னை அடவா னமெழுகுடனேசமனுய்ச்சேர்த்து- வாமேநீபாண்டத்தி லுருகும்போது வளமானதேங்காயின்நெய்யைவார்த்து-நாமேநீயுருக்கிவடிகட்டிநீரில் நல மாகத்தான்வார்த்து எடுத்துக்கொள்ளே. (சoசு)

கொள்ளப்பாசிமிழில்வைத்துப்பதனமாக்க் கொற்றவனே சல்லாவ ஸ்திரத்திற்பூசி-அள்ளப்பா அனல்தனிலேகாட்டிகட்ட அடவில்லாரணங் களெல்லாமாயிப்போகு-மெள்ளப்பாசிரங்குபுண்ணில் * பிளாஸ்திரிபோ ட மேன்மையாயொடுங்கியதுஉதிர்ந்துப்போகும்-தெள்ளப்பாபோகருட கடாட்சத்தாலே தெளிவாகப்புலிப்பாணிபாடினேனே. (சoஎ)

* பிளாஸ்திரி-களிம்பு.

பிளாஸ்திரி.

பாடுகிறேனின்னமொருபிளாஸ்திரிகேளு பாங்கான விளாம்பிசினு ங்கருங்குங்கிலியம்-தாடுகிறேன்சமன்கொண்டுஉருகும்போது நலமான விளக்கெண்ணெய்கூடவிட்டு-ஆடுகிறேன்வடிக்கட்டிக்கலசந்தன்னில் அ டவாகத்தானடைத்துத்துணியிற்பூசி-சூடுகிறேன்ரணங்கள்மேல்யோடஆ றும் சுகமாகஅனல்காட்டிப்போட்டிடாயே. (சoஅ)

போட்டிடவேஇன்னமொருபிளாஸ்திரிசொல்வேன் புகழ்பெரிய*ம ரத்துவெள்ளைப்பலந்தானைந்து-கூட்டிடுவாய்பூரமெடைவிராகனைந்துகூட் டியேதானரைத்துப்பொடியாய்ச்செய்து- மாட்டிடுவாய்தென்னங்கா யெ ண்ணெயாலே மைந்தனேதானரைத்துத்தண்ணீர்விட்டு- ஆட்டிடுவாய்த்த வளம்போலாகுமட்டும் அப்பனேபுண்மேலேபோடப்போமே, (சoகூ)

* மரத்துவெள்ளை-வெள்ளைக்குங்கிலியம்.

மேகராசாங்கத்தெண்ணெய்.

போமென்றமேகராசாங்கத்தெண்ணெய் பூட்டுகிறேனன்றுகப்புகல க்சேளு-ஏமென்ற*ஏரண்டத்தெண்ணெய்படிநாலு இதமா*ஈருள்ளிச்சா றுபடிரண்டு-ஆமென்றகழுதைலத்திச்சாறுபடிரண்டு அடவாகவரிக்குமட் டிச்சாறுபடிரண்டு-வாமென்றகையான்புளியாரைச்சங்கு வல்லாரைப்பிர மிபொடுதலைசெருப்படியே. (சகo)

* ஏரண்டத்தெண்ணெய்-ஆமணக்கெண்ணெய்.

* ஈருள்ளி-வெங்காயம்,

படியானகருநொச்சிப்பொன்னாங்காணி பாரிநுணா ஆதொண்டைக்
*கிரந்திபூண்டு-செடியானவெள்ளறுகுசிவனார்வேம்பு செயலானவகைக்
குவகைப்படிதான்ரண்டு-கெடியானச்சாறெல்லாமெட்டொன்றுக்கிக் கெ
ணிதமாய்வேருவகைசொல்லக்கேளு- பிடியானகொடிவேலிபூவரசன்வே
ரும் பொங்குநிலவாரை*சுடுதூரத்தம்வேரே. (சகக)

* கிரந்திப்பூண்டு-கிரந்திநாயசம்.

* சுடுதூரத்தம்-சித்திரப்பாலை

வேரான*கிளிமூக்கின்கிழங்கினோடு விதமான அப்பைபுடகிழங்குங்
குப்பி-சீரானவகைவகைக்குப்பலமதாகச் சேர்த்திடித்துக்குறுணிநீ ரொட்
டொன்றுக்கிக்-காரானஎண்ணெயிலேவிட்டுமைந்தா கடைச்சரக்குஇதிற்
போடக்கருத்தாய்க்கேளு-பேரானசாதிக்காய்க்கிராம்புஏலம் பேதமில்லா
ச்சிறுலவங்கப்பட்டைவால்மிளகே. (சகஉ)

* கிளிமூக்குக்கிழங்கு-கற்றாழைக்கிழங்கு,

மிளகுடனேஅகிமதுரங்கோஷ்டந்திப்பிலி மிதமானதிப்பிலியின்மூ
லத்தோடு-அளகானவெண்காரம்குரோசாணியோமம் அடவானதான்றிக்
காய்க்கடுக்காய்காயம்-களமானசரியசீரகங்கார்போகங் கஸ்தூரிஆரத்தைசு
க்குஅதிவிடையமக்கிராகாரம்-புளகானகடுகுரோகணியுமாஞ்சில் பொங்
கமுடன்தாளிசபத்திரியுமாமே. (சகந)

ஆமென்றகசகசாஓமங்கஞ்சா அடவானவலம்புரிக்காய்பறங்கிப்பட்
டை-வாமென்ற*செணமரப்பட்டையோடு வளமானவாலுழுவைசிறுநாக
ப்பூ-ஊமென்றதக்கோலமவசம்புசுக்கு உத்தமனேயபினிவசு வாசிசீரம்-
போமென்றயானைத்திப்பிலிகுங்குமப்பூ பொங்கமுடன்வாளஞ்சேங்கொ
ட்டைத்தானே. (சகச)

*செணமரப்பட்டை-அழிஞ்சிப்பட்டை.

தானென்றளவச்சாரஞ்சத்திச்சாரந் தயவானநவாச்சாரஞ் சாஸ்திர
பேதி - ஆனென்றவகைவகைக்குவிராகனாலு அடவாகப்பொடித்துஎண்
ணெய்தன்னிற்போட்டு-வானென்றமெழுகுபதந்தனிலிறக்கி வண்மைபெ
றக்கணபதியைப்பூசைசெய்து, தேனென்றகுருபதத்தை மனதிலுன்னித்
தென்புபெறஒருகாரண்டியுள்ளேகொள்ளே. (சகரு)

கொள்ளப்பாஅந்திசந்திகொண்டபோது கொடிதானபத்தியந்தானெ
துவுமாகா,தெள்ளப்பாமூன்றுநாளாறுவேளை தெளிவாகஏழாநாள் நீரா
வாரு-மெள்ளப்பாவறுத்தஉப்பும்பருப்புமாகும் மேன்மையாய்மற்றுநா
ள்புளியைக்கூட்டு-சுள்ளப்பாகிரந்தியனாயாப்புச்சூலை சுகமில்லா விப்பு
ருதிகண்டமாலைபோமே. (சகசா)

போமேநீயிருபத்தோர்மேகமுந்தான் பொங்குகின்றகுஷ்டமோடு சோகைப்பாண்டு-தாமேதான்சமூல்வாதம் அண்டவாதந் தயவில்லாகால் வாதம்பச்சைவாதம், ஆமேதான்பவித்திரமுமூலப்புற்று அடவானமண்டையுடசூலேவாயு, தீமேநீரணங்களொடுசூலேதீரும் திறமானபோகருட கடாட்சந்தானே. (சகஎ)

தானன எள்ளெண்ணெயேரண்டத்தெண்ணெய் தயவானஇலுப்பெண்ணெய்வேப்பெண்ணெய்தான்- மானன புங்கெண்ணெ யைந்துந்தானும் மைந்தனேவகைவகைக்குப்படிதானென்று - தானனபாண்டத்தி லள ந்துவிட்டுத்தயவாகக் கியாழவகைச்சொல்லக்கேளு- கோனன ஆதொண்டை மூலம்பத்திரிகொற்றவனேசெம்புடையமூலங்கேளே (சகஅ)

கேளேநீதழுதாழைகாட்டாமணக்குக் கெணிதமாய்த்திருகுகள்ளிவேலேமேனி, நாளேநீமாவிலிங்கம்ஆவிநொச்சி நலமானவேம்புபுங்குவெள்ளேநொச்சி, சூளேதான்கொடிவேலிகார்முருங்கைச்சங்குசுகமாகஊர்முருங்கைத்தூதுவேளே,வாளேநீமாம்பட்டைமூலிகைதான்மூலம் வகைவகைக்குப்பலமைந்துநிறுத்துக்கொள்ளே (சகசு)

கொள்ளப்பாஇவையெல்லாமிடித்துப்போட்டு குணமாகத்துணிநீரெட்டொன்றாக்கி, தெள்ளப்பாஎண்ணெயிலேயிறுத்துவாரு தெளிவாகச்சரக்குவகைசொல்லக்கேளு- மெள்ளப்பாஅரத்தைசுக்குஓமந்திப்பிலி மேன்மையாய்த்திப்பிலியின்மூலத்தோடு- அள்ளப்பாஆனைத்திப்பிலியுங் காயம் அடவாகக்கருஞ்சீரகஞ் சதகுப்பைத்தானே. (சரு0)

தானென்றதேசாவரங்குராசானி*யுள்ளி தயவாக* வெளிச்சியென்றபிசினியோடு -வானென்றவசம்புடனேதேக்குஇஞ்சிமைந்தனேசடாமாஞ்சில்கிராம்பு* குக்கில், தேனென்றவகைவகைக்குப்பலங்காலாகத்தெளிவாகஅரைத்திட்டு எண்ணெயிலேபோட்டு-கானென்றமெழுகுபதந்தன்னிற்காய்ச்சிக்கணபதிக்குப்பூசைசெய்து எடுத்துக்கொள்ளே, (சருக)

* உள்ளி-வெள்ளேப்பூண்டு

* வெளிச்சி-விளாம்பிசினி.

* குக்கில்-மைசாட்சி.

கொள்ளப்பாதயிலங்காசெடைதானுண்டு குணமாகமேலெங்கும்பூசினக்கால்,கள்ளப்பாசந்தியெங்கேதோஷமெங்கே கடிதானவலிப்பேழும் அண்டவாதம்- சுள்ளப்பாவாதமென்றவகைகளெல்லாஞ்சுழன்றெழுந்து ஓடிவிடுமெதிர்நில்லாது- மெள்ளப்பாமூன்றுநாளாறுவேளே மேன்மையாயேழுநாள்நீராவாரோ, (சருஉ)

விஷமுட்டித்தயிலம்

வாரேதான்விஷமுட்டித்தைலமொன்று வளமாகச்சொல்லுகிறேனன்றுய்க்கேளு- சேரோதான்யேரழிஞ்சியெட்டிச்சங்கு செயலானவன்னிபுங்கு*வண்டுகொல்லி-சாரோதான்சங்கங்குப்பி கடம்புசின்னிசார்வானவெள்ளறுகுஆவிப்பட்டை -தீரோதான்மருக்காரைஇண்டுக்கொத்தான்திறஞ்செங்காயுருவிவாகஞ்சோரியாமே, (௪௨௩)

* வண்டுகொல்லி-சென்பகம்,

ஆமேதான்குன்றிமனிகறுத்தகண்ணி ஆவாரைசிவன்வேம்புகழுதைமுள்ளி-தாமேதான்*மருதோன்றிபுரசுகருங்காலி தயவானபுடாத்தியொடுகிளுவைவாகை- போமேதான்புனலிண்டுகருவூமத்தை பொங்கமுட்டன்கொடுவேலிமுத்தக்காசு - வாமேதான்அமுக்கராவிட்டத்தாறிப்பூவரசுட்டனே*சின்னபலாக்*குமரித்தானே, (௪௨௪)

* மருதோன்றி-ஐவன்னி,

* சின்னபலா-குட்டிப்பலா*குமரி-சோற்றுக்கற்றாழை,

தானனமிளகுருணைகொன்றையாத்தி தயவானகழற்கொடியுஞ்செங்கத்தாரி,தானன*பெருமரமும்அவிரி*கட்டுவெளமாகச்சமனறுக்கியுலர்த்திக்கொண்டு-பானனகுழித்தயிலமாகவாங்கி பக்குவமாய்த்தானெடுத்துப்பதனம்பண்ணு, மானனசீவசெந்துவகையைச்சொல்வேன் மைந்தனேமூஞ்சூறுகருங்காகமாமே, (௪௨௫)

*பெருமரம்-தலைச்சுருளி*கட்டு-கட்டுக்கொடி.

ஆமேதான்அழுங்கோடுகழுகாமையாந்தை அடவு*பச்சோந்தியுங்*கூகைதேவாங்கு-தாமேதான்பசுந்தவளைப்பெருவிரியன்தயவானமனுஷன்மண்டைகழுதைமண்டை-போமேதான்* மேதிக்கொம்பு* பரிக்குளம்பினோடுபொலியானைலத்திமுதல்புழுக்கைத்தானும்-வாமேதானெட்டகத்தின்லத்திகூட வன்பன்றிக்கழுதையுடலத்திதானே, (௪௨௬)

* பச்சோந்தி-பச்சைஓணான்,

* கூகை-கோட்டான்.

* மேதிக்கொம்பு-எருமைக்கொம்பு,

* பரிக்குளம்பு-குதிரைக்குளம்பு.

தானப்பாவெள்ளாட்டுப்புழுக்கையோடு தயவாகச்சமன்கொண்டுஇடித்துலர்த்தி-பானப்பாகுழித்தயிலமாகவாங்கிப் பாங்கானஇருதயிலஞ்சமனாய்ச்சேர்த்து- கோனப்பாசேங்கொட்டைத்தயிலமரைப்படிகொற்றவனேதயிலத்தின்கூடவாரு-வானப்பாகருப்புடைகுங்கிலியம் வளர்த்திகையின்* பூட்டுடையபூச்சித்தானே, (௪௨௭)

* பூட்டு-சூட்சம்,

தானடாகருஞ்சீரங்கஸ்தூரிமஞ்சள் தனித்தேதான்மாசக்காயிரசக
ர்ப்பூரம்- மானடாசெனுமரப்பட்டையோடு மைந்தனேவகைவகைக்குப்
பலந்தானென்று-வானடாபறங்கிப்பட்டைபிரப்பன்கிழங்கு வளமாகப்ப
லம்ரண்டுநிறுத்துப்போட்டு-பானடாவலம்புரிக்காய்கடுக்காயோடுபாங்கா
கப்பலமொன்றுநிறுத்துக்கொள்ளே (சாஉஅ)

கொள்ளேதான்ஒதியம்பட்டை*கொடிபிலேசாறுகுணமாகச்சரக்கெ
ல்லாமறைத்துப்போடு-அள்ளேதான்மயிலெண்ணெய்வேப்பெண்ணெயி
ரண்டும்அட்வானதயிலத்தில்நேரேசேர்த்து-துள்ளேநீதுளாவிமிகப்பதத்
திற்காய்ச்சி சுகமானகணபதிக்குப்பூசைப்பண்ணு-தெள்ளேதான்துவளே
யிடுந்தேகமெங்கும் தெளிவாகநோய்தீரும்விவரம்பாரே, (சாஉகூ)

* கொடி-சித்திரமூலம்.

மாரேதான்கால்முடங்கைமுடமுந்தீரும் பாங்கானசூலையொடுகுஷ்
டநோயும்-சேரேதான்புடையன்செவ்வட்டைமரவட்டைசெய்யான்வண்
டுகடிபில்லிவஞ்சினையும்- நீரேதான்பூதமுதல்பசாசுவேதாளம்திறமானபி
ரமராட்சதையுங்கூட-வீரேதான்மற்றுநாள்வேதுதண்ணீர் வீரானநோய
றிந்துத்தண்ணீர்வாரே, (சங0)

வாரடாகைப்போடுபுளிபுகையுர்தள்ளு வளமானவுப்பைநன்றாய்வ
றுத்துக்கூட்டு - பாரடாபாசிபயர்கொடிக்காலின்பஞ்சு பாங்காகமுருங்
கையுடபிஞ்சுமாகும் -கூரடாஆவின்பால்நெய்யுமாகுங் குணமானதுவ
ரையுடபருப்புமாகுஞ்-சீரடாவியாதியுடகுறியுங்கண்டு சிறப்பாகப்பத்தி
யத்தைச்சீராய்க்கூட்டே, (சஙக)

விஷங்களுக்குமெழுகு-

கூட்டப்பார்வரிக்குமட்டிப்பழச்சாற்வாங்கி குணமாகப்பாண்டத்தி
ல்மைபோற்கிண்டி- மாட்டப்பாசிமிழ்தனிலேயடைத்துக்கொண்டுமைந்
தனேபசும்பயறுஅளவாய்த்தானும்-மீட்டப்பாகாவுதனில்தட்விப்போடு
மிகுந்ததொருவிஷங்களெல்லாமிறங்கிப்போகும்-ஆட்டப்பாபோகருடக
டாக்ஷத்தாலே அட்வாகப்புலிப்பாணிபாடித்தானே, (சஙஉ)

அக்கினிமந்தத்திற்குலேகியம்.

தானென்றதிரிகடுகு ஓமம்வாய்விளங்கம் தயவாகவகைவகைக்குவி
ராகனேந்து-போனென்றபொடிபண்ணிச் சர்க்கரைசேர்த்துப்பொங்கியே
தேன்படிக்கால்நெய்ப்படிக்கால்வார்த்து- கோனென்றுபிசைந்ததிலேவை

த்துக்கொண்டுகுணமாகநெல்லிக்காயளவுகொள்ள-வானென்றவாயுஅக்கினியின்மந்தம்வாங்குமடாபோகருடகடாடசந்தானே, (௪௱௩)

சுத்தவல்லாதிஎண்ணெய்.

தானப்பாசுத்தவல்லாதிஎண்ணெய் தயவாகச்சித்தாமுட்டி மூலத்தோடு - ஆனப்பாபலமதுமுப்பத்திரண்டு அடவாகத்தானிடித்துஇருதூணிநீரில்-பானப்பாநாலிலொன்றுகாய்ச்சிவாங்கிப்பாங்காகஐந்தெண்ணெயொருபடிதான்வாரு, வானப்பாகெந்தியதிமதுரங்கோஷ்டம் வளமாகச்சாதிக்காய்சாதிபத்திரியே, (௪௱௪)

பத்தானஏலமுடன்லவங்கப்பட்டைபாங்கான அரத்தைசுக்குஅக்கிராகாரம், முத்தானமாஞ்சில்தாளிசையாம்பத்திரி மூடுக்கானவாய்விளங்கம்யானைத்திப்பிலி, சித்தானதிப்பிலிகடுகுரோணியுந்திருக்கைநீர்வாலின்மிளகுஜமம்- வித்தானகுங்குமப்பூகருப்புசீரகம்விதமானகடுக்காயுந்தான்றிக்காயே, (௪௱௫)

காயானசெண்பகப்பூசொத்துமல்லிகருவானவாலுழுவை சிறுநாகப்பூமாயானவெசவியமதுகழஞ்சுநாலுமைந்தனேபொடிப்பண்ணியெண்ணெயிலேபோடு-தாயானபழச்சாறுபசுவின்பாலு தயவாகவகைவகைக்குப்படிதான்வாரு-சேயானமெழுகுபதந்தனில்வடித்துச் செயமானபுழுகுட்னேகஸ்தூரிப்போடே (௪௱௬)

போடேதான்வகைக்குவகைக்கழஞ்சிதானும் பொங்கமுடன்கணபதிக்குப்பூசைபண்ணு- நாடேதான்காசெடைதான்எண்ணெய்கொள்ளநாசியிலேயொருதுளிமேலேபூச, சாடேதான்முகவாதமண்டைவாதம் சடிதானபித்தமொடுநீலகாசம்- சூடேதான்பீநசமும்வாயுசூலை சுகமில்லாச்சொரிமுதலாய்த்தீரும்பாரே, (௪௱௭)

பரோதான்மூன்றுநாளாறுவேளை பாங்காகக்கொள்ளையிலேபத்தியத்தைக்கேளு-சேரோதான்சியக்காய்வெந்நீர்வாரு; சிறப்பானபசும்பயறுஉப்புங்கூட்டு-தீரோதான்நாலாநாளெல்லாங்கூட்டுதீர்க்கமாயிப்படிமூன்றுகெடுவேகொள்ளு- வீரோதான்சொன்னபிணிதீரும்பாரு விதமானபோகருடகடாட்சந்தானே, (௪௱௮)

ஈளை காசம் பெருமூத்திரத்திரச்சி நீரடைப்பு கிரிச்சினம் பெரும்பாட்டுக்குலேகியம்,

தானான வரிக்குமட்டிவேர் பலமும்பத்து தயவானகடுக்காய்வேர்நெல்லிவேரும், மானானதான்மிக்காய்வேரினோடு மைந்தனே*அந்திமல்லிகையின்வேரும்-கோனானவெட்டிவேர் வில்வவேரும்குணமானவிலாமிச்

சைதுதுவேளை*நாயு- வானுனமாதளை*தாங்கிசிறுகாஞ்சோரி, வளமான நெய்தலொடுசெங்கழுநீர்க்கிழங்கே. (சநகூ)

* அங்கிமல்லி-பத்திராசி.
* நாரி-நன்னாரி.
* தாங்கி-மலைதாங்கி.

கிழங்குகாசுமல்லிநிலப்பனையும்*வாகை கிருபையுடன்கண்டங்கத்திரியின்மூலம்-புளங்கமப்பாவகைவகைக்குப்பலந்தானென்று போட்டிடித்துத்துணிநீரோட்டொன்றாக்கி,விளங்கப்பாபசுவின்பால்படிநால்விட்டு விதமானசரக்குவகைசொல்லக்கேளு-முளங்கப்பா சாதிக்காய்சாதிபத்திரிமுடியானகிராம்பேலம்வாலுடையமிளசே. (சச0)

* வாகை-நிலவாகை.

மிளகானசிறுலவங்கம்மஞ்சிஷடிகோஷ்ட மிருந்தநல்லசந்தனமும்கரியசீரம்-அளகானசதகுப்பைவாய்விளங்கம் அடவானசாஸ்திரமாம் பேதியோடு-புளசானதாளிசப்பத்திரிதேவதாரம் புனிதசிரகமிளகுசிறுநாகப்பூ-இளகான அதிமதுரம்*காஞ்சினியும் ஈமவாலுழுவைதேக்கு * சிங்கியாமே. (சசக)

* காஞ்சினி-மஞ்சள்.
* சிங்கி-கடுக்காய்ப்பூ.

ஆமேதான்கஸ்தூரிமஞ்சளோடு அடவானதிப்பிலியுந் திப்பிலியின்மூலம் - போமேதான்ரோகணியும்நெருஞ்சில்முள்ளு பொங்குமுடன்குரோசாணிமுத்தக்காசு-தாமேதான்கடுக்காயும்நெல்லிக்காயுந் தயவானகுங்குமப்பூமாதளையின்பிஞ்சு- வாமேதான்வகைவகைக்குக்கழஞ்சிநாலு வளமாகப்பசுவின்பால்தன்னலாட்டே. (சசஉ)

ஆட்டியேகியாழமதுதன்னிற்போட்டு அடவாகஆவின்பால் நெய்படிநால்விட்டு-நாட்டியேசெவ்விளநீர்பழச்சாறுதானும் நலமானவல்லாரைச்சாறுங்கூட- மூட்டியேவகைவகைக்குப்படிதான்ரண்டு மூசியாதசீனியதுபலந்தான்ரண்டு கூட்டியேநல்லவெல்லம்பலந்தானுலு கூடவிட்டுமெழுகுபதந்தன்னிற்காச்சே. (சசங)

காச்சியேவடிகட்டிக்கலசத்திட்டு கணபதிக்குப்பூசைசெய் நெற்புடந்தான்திங்கள்-ஆச்சியேயெடுத்துநீ வைத்துக்கொண்டு அட்வாகமுக்கழஞ்சிஅந்திசந்தி-தாச்சியேகொண்டிட்டேவயீளைகாசந் தயவில்லாத்தலைநடுக்கம்பித்தமேகம்-ஆச்சியேவலிப்போடுகல்லடைப்பு அளவில்லாமூத்திரத்தின்கிரிச்சியோடு-பேச்சியேபெரும்பாடுமேலெரிவுகாந்தல் பேதமில்லாநீர்ச்சிறுப்புவாயுபோமே. (சசச)

போமடாமலடிக்குப்பிள்ளையுண்டாம் பொங்கியகைப்புபுளி தயிரு மாகா-வாமடாநெய்விட்டாலெல்லாமாகும் வளமானதேகமதுகாந்தியுண் டாம்-பாமடாபவளபற்பம்நெய்யிற்கூட்டி பாங்காகக்கொண்டிடவே நோ ய்களெல்லாம்-தாமடாகைகளுப்புமாறிப்போகும் தயவானபோகருடகடா ட்சந்தானே. (சசரு)

பீநசத்துக்கு எண்ணெய்.

தானப்பாபீநசத்துக்கெண்ணெய்கேளு தயவாகஎள்ளெண்ணெய்ப் படிதான்ரண்டு-வானப்பாசரிசாலைபொன்னுங்காணி வளமானவெற்றிலை யுவுரிமுசுமுசுக்கை- மானப்பாமூக்குரட்டைஅத்திப்பட்டை மைந்தனே வகைவகைக்குப்படிச்சாற்விட்டு-கோனப்பாஆதொண்டை யிலைச்சாற்தா னுங் கொற்றவனேபடியிரண்டளந்துவாரே. (சசசு)

வாரப்பாபீநசமாம்பூண்டுமூலம் வகையுடனேஇடித்தச்சாற் படிதா னென்று - வீரப்பாபசுவின்பாற்படிதானென்று வித்தகனேயடுப்பேற்றி வேகும்போது - சீரப்பாமிளகுடனேகஸ்தூரிமஞ்சள் சிறுகடுக்காய்நெல் லிவித்துநிம்பவித்துங்- காரப்பாகருஞ்செம்பைப்பூவுந்தானுங் கனமாகவ கைவகைக்குப்பலந்தான்வாங்கே. (சசஎ)

வாங்கியேபொடித்திட்டுமுன்னெய்யிற்றூவி வகையுடனே மெழுகு பதமானபோது-தாங்கியேபோகாதே யிறக்கிக்கொண்டு துய்யமிகுங்கண பதியைப்பூசைசெய்து-தீங்கில்லாத்தயிலமதைத்தினமுநான்கில் தீவரமா ய்மூழ்கிவரத்தீரும்ரோகம், ஏங்கியேதிரியாதேபுளிப்புகைப்பு எள்ளெண் ணெய்மாங்கிஷமுமீனாகாதே. (சசஅ)

ஆராது*விடயங்களாகாதப்பா அப்பனேவறுத்தஉப்புதுவளையாகு ம்-வேகாதபண்டங்களொன்றுமாகா வெங்கீருமுருங்கைக்காயவளைப்பிஞ் சும்-நோகாதவழுதலங்காய்வற்றலாகும் நோயாளிகண்டறிந்து பத்தியஞ் செய்தாற் - போகாதபீநசங்கள்பறந்துபோகும் போகருடகடாட்சத்தாற் பாடினேனே. (சசகூ)

* விடயங்கள்-பெண்போகம்.

மேகங்களுக்குத்தீப்புகை.

பாடுவேன்மேகமென்றரோகந்திரப் பாரிலுள்ளபண்டிதரோபகரக்கே ளு-நாடுவேன்பூரமதுவீராகனென்று நலமான*சூதசிந்தூரமொன்று-கூடு வேன்தேன்மெழுகுபலமோகாலு குறியாகக்கரண்டியிலே உருக்கிக்கொ ண்டு-ஆடுவேன்முன்சரக்கைப்பொடித்தூத்தூவி அப்பனேயிறக்கியைந்து த்திரியிலூட்டே, (சருo)

* சூதசிந்தூரம்-ரசசிந்தூரம்.

ஊட்டியேரோகிதனையறையில்வைத்து உத்தமனேதிரியொன்றைதீபமேற்றி-நாட்டியே*கண்சிரட்டைஎதிரில்வைத்து நலம்பெறவேரோகியின்மேல்போர்வையிட்டு-தாட்டிகமாய்த்திரியெரித்து அணையுமட்டுந் தானிருந்துவேர்வையெல்லாந்துடைத்துப்போட்டு-ஆட்டியேஆவின்பால் உழக்குள்தந்து அப்பனேபாலன்னம்பின்னுற்கொள்ளே, (சுருக)

* கண்சிரட்டை-கண்கொட்டாங்கச்சி.

கொள்ளவேஉப்பாகாமூன்றுநாளுங் குணமாகப்பாலன்னங்கொள்ளவேண்டுந்-தள்ளவேமற்றொன்றுமாகாதப்பா தண்மையுடன்நான்காநாள்வெந்நீரோடு-மெள்ளவேநீருமுள்ளிசமூலங்கொண்டு மிதக்கவிட்டுக்காய்ச்சியபின்னுறவிட்டு-அள்ளியேஓமமிட்டுநீரைவார்த்து அப்பனே*செம்மறியின்மிளகுநீரே. (சுருஉ)

* செம்மறி-செம்மறியாடு.

நீரிலேமிளகாகும்உப்புமாகும் நிட்சயமாயன்றுதொட்டுக் காரசாரமாரியேநெய்யோடுபாலுமாகு மமைந்தனேஆட்டிறச்சிமச்சமாகும், பாரினிலேபெண்ணுகாபுளியுமாகா பாலகனேவாய்நீரைஆற்றலாகா - வீரியமாயிருபதாநாளோமந்தேய்த்து விருப்பமுடன்விளக்கெண்ணெய் முப்பதிலேமூழ்கே. (சுருங)

முப்பதுடன்பத்துநாளாகுமுன்னே முக்கியமாய்த்தீருகின்றவியாதிகேளு-தப்பதுடன்பிசசங்களேழுந்தீருந் தலைப்பிளவைஉச்சிபுற்றுக்கண்டமாலை-கப்பதுடன்கன்னபுற்றுலிங்கப்புற்றுகனமானஅண்டப்புற்றுயோனிப்புற்று-இப்பதுடன்பல்லரணைசந்தப்புற்று இயலானமார்பிளவைகொறுக்கைபோமே. (சுருச)

போகுமேஅரையாப்பு ஆசனத்திற்புற்று பொல்லாதபௌத்திரங்கள்மேகவெடிசூலை-சாகுமேகுஷடவெடிதுடையில்வாழைசலக்கண்ணி அழுக்கண்ணிசதைவளர்த்தல்-ஏகுமேதவளைசொறி ஆனைச்சொறிபீலி இயவில்லாரணங்களெல்லாமெளிதிற்போகும் - ஆகுமேபோகருட்கடாட்சத்தாலேஅவனிதனில்புலிப்பாணிஆடினேனே. (சுருரு)

அண்டமெழுகு.

ஆடியேசிற்றண்டமெழுகிதப்பா அப்பனேசொல்லுகிறேன் வில்வ*மூலம்-தேடியேவீசைபத்துக்கொண்டுவந்து தேர்ந்ததனைநறுக்கியபின்நிழுலுலர்த்தி-வாடியேபோகாதேயாண்டத்திட்டு வாய்மூடிசீலைசெய்துகுழித்தைலம்வாங்கி-நீடியேதலைஅண்டம்பீங்கானிலிட்டு நிலவரமாய்த்தைலமதைநிறையவாரே, (சுருசு)

* மூலம்-வேர்.

வார்த்தபின்புநாற்பதுநாள்ரவியில்வைத்து வற்றவற்றத் தைலமதை வார்த்துவந்தால்-பார்த்திருக்கபண்டிதர்கள்மாயமாக பசுமையுள்ளமெழுகாகும்பகரக்கேளு- தூர்த்துவந்தவாதமெல்லாந்துலைந்துபோகுஞ் சுண்டக்காயளவெடுத்துதேனிலீந்தால்-ஆர்த்திருந்தசூலையெல்லா மயர்ந்துபோகுமடவாகப்புலிப்பாணியறைந்திட்டேனே. (௪௫௭)

* இலவணச்செந்தூரம்.

அறையுறேன்லவணத்தின்சிந்தூரங்கேள் அப்பனேகல்லுப்புப்பலந்தானுலு-கறையுறேன்சூதம்துபலந்தானென்று கல்வத்தில்தானிட்டு* கூவிளத்தின்சாற்றால்-மறையவேதானரைத்துரண்டுசாமம் மார்க்கமாய்க்குகையில்வைத்துச்சொல்லக்கேளு- விரையுறேன்போகருட கடாட்சத்தாலே விவரமுடன்புலிப்பாணிவிளம்பக்கேளே. (௪௫௮)

* இலவணம்-உப்பு.
* கூவிளம்-வில்வம்.

கேளேதான்உலையில்வைத்துப்பழுக்கஊத கிருபையுடனுருகியதுமணிபோலாகும்-கோளேதான்வாராமல்ஆறவிட்டுக் கொற்றவனேகல்வமிட்டுப்பொடியாய்ச்செய்து - நாளேதான்*அந்திரத்தாமரையின்சாற்றால் நால்சாமந்தானரைத்துப்பில்லிதட்டி-பாளேதான்போகாமல்காயவைத்துப் பக்குவமாய்ச்சில்லிட்டுப்புடமுழமுமாமே. (௪௫௯)

* அந்திரத்தாமரை-ஆகாசத்தாமரை.

ஆமேநீமுன்போலேஐந்துபுடம்போட்டால் அப்பனேசிந்தூரமாகும்பாரு-தாமேநீயெடுத்ததனைச்சிமிழில்வைத்து தயவாகப்பணவெடைதான்தேனிம்கொள்ள-போமேநீகுன்மமென்றதெட்டுந்தீரும்பொல்லாதநெஞ்செரிவுசூலைரோகம்-வாமேநீசூககத்தின்வாயுதீரும்வல்லமையாய்ப்புலிப்பாணிவகுத்திட்டேனே. (௪௬0)

*நமனுசமெழுகு.

வகுத்திட்டவே*நமனுசமெழுகுதன்னை வளமாகச்சொல்லுகிறேன்மைந்தாகேளு-தொகுத்திடுவேன்லிங்கமொடுதாளகமுஞ்சிங்கி சொற்பெரியமனோசிலையுங்கௌரிவெள்ளை-பகுத்திடுவேன்சூதங்கெந்திவீரம்பூரம் பாங்கானதுருசியுடன்வகைக்குத்தானு- மகத்திடுவாய்விராகனெடையொன்றேதானு*மாசற்றவாளமதுயதினொன்றாமே, (௪௬௧)

* நமன்-எமன்*மாசற்றவாளம்-சுத்தித்தநேர்வாளம்.

ஆமேதான்சரக்கெல்லாங்கல்வத்திட்டு அப்பனே அங்கக்காடியினாலாட்டி - தாமேதான்நாற்சாமமானபின்பு தயவாகமுழச்சீலை அதில்பரப்பிபோமேதான்திரித்ததனைக்காயவைத்துப் பொங்கமுடன்ஆவினெய்ப்பலமெட்டாகும்-தீமேதானில்லையடா சுடர்த்தயிலமாக தீவரமாய்மூன்றுமுறைமட்டக்கிச்செய்யே. (௪௬௨)

செய்தபின்புதைலமதை யெடுத்துக்கொண்டு செப்பரியபனைவெல்லம்பலமுமூன்று, கொய்தசுக்குகூடனுமுன்தைலங் கூடக்கொற்றவனே விராகனெடைசேர்த்துவைத்து-கைதவமாய்ச்சுண்டக்காய் அளவுகொள்ளகடத்திலுள்ளவாதமெல்லாங்கதிகெட்டோடும், பைதமுடன் மாதமொன்றுக்கைந்துநாள்தான்பக்குவமாயிப்படியேமூன்றுமுறைதானே,(சகூங

தானகத்தீருசென்றவியாதிசேளுதகைமையில்லாக்குன்மமெட்டுஞ்சூதகத்துவாயு-மானகத்திமிர்வாதங்குட்லின்வாதம் மன்னவனே*பக்ஷமென்றவாதம்போகும், வானகப்பத்தியந்தான்சொல்லக்கேளு வண்மையுள்ளபசும்பாலும்பசுநெய்யாகும் - தேனகப்பசும்பயறுவறுத்துப்பாகுந்தெளிவுடன்பத்தாநாள்விளக்கெண்ணெயால்மூழ்சே, (சகூச)

* பக்ஷவாதம்-பாரிசவாயு,

மூழ்கியபின்மதுபானம்பெண்ணுகாது முக்கியதொண்ணூறுநாளாகுமட்டும்-மாழ்கியேபோகாதேமனம்விடாதே மதிகெட்டுநில்லாதேமருந்தேருது- காழ்த்தபண்டந்தின்னுதே,காலேமாலேகாலாறநீட்டந்துதிரும்பநன்று- வாழ்த்துவார்போகருட்கடாட்சத்தாலேவகையாகப்புலிப்பாணிவசனித்தேனே, (சகூரு)

ஆனைக்கால்திரலேகியம்.

வசனித்தேன்*கருங்குருவைமாப்படிகால்[illegible]ள்ளிப்பாலரைக்கால்-நசனித்தபசும்பால்தா[illegible]படியரைக்கால்நவிலக்கேளு- தசனித்தமாத[illegible]கஅடுப்பேற்றிலேகியமாய்க்கிண்டி-அசனித்[illegible]ப்பனேகலசமதில் பதனம்பண்ணே (சகூசு)

* கருங்குருவை-கருப்பரிசி,

பண்ணப்பாகழற்சிக்காயளவாய்க்கொள்ளுபக்குவமாயைந்துதினமிருநேரந்தான்-நண்ணப்பாஇம்முறையாய்மூன்றுமாதம்நன்மையுடன்கொள்வதற்குப்பத்தியங்கேள்- உண்ணப்பாநெய்பால்பசும்பயறுகும் - உத்தமனேவறுத்தஉப்புமிகவுமாகும்-கண்ணப்பாமறுபத்தியமிருந்துவிளக்கெண்ணெயால்மூழ்கு கருணையுள்ளபோகருட்கடாட்சந்தானே. (சகூஎ)

அர்த்தனுதிசுரமாத்திரை.

தானென்ற*அர்த்தனநிமாத்திரையைச்சொல்வேன் தனிவெள்ளைப்பாஷாணம்விராகனென்று- கோனென்றகோரோசினைவிராகனென்றுகொற்றவனேமுலைப்பாலால்சாமமாட்டி -பானென்றபசும்பயற்போலுண்டை

செய்து ரக்குவமாய்வலமுலைப்பால் தன்லிலீய-வாமென்றபோகருடக டாட்சத்தாலே வண்மையுள்ளசுரம்நீங்கிஅர்த்தமாமே, (௪௬௮)

* அர்த்தம்-பாதி-ஆசையிலுவமானம்பொன்,

அர்த்தமென்ற இடமுலைப்பால்தன்னிலீந்தால் அப்பனேஇடப்புறத்துசுரம்நீங்கியொருபுறமாய்நிற்கும்,வர்த்தமென்ற இருமுலைப்பால்தந்தால்வகைகெட்டுச்சுரமதுதானுடனேநிற்கும்- கர்த்தனென்றுஉனைத்துதித்துலோகமெங்குங்-கால்விழுந்துகும்பிடுவார்கதிதாவென்று- விர்த்தனென்றபோகருட கடாட்சத்தாலே விவரமுடன்புலிப்பாணிவிரித்ததாமே ()

அமிர்தசஞ்சீவிமாத்திரை

ஆமென்றஅமிர்தசஞ்சீவிமாத்திரை அடவாகச்சொல்லுகிறேனப்பா கேளு- தாமென்றசாஸ்திரபேதியேலந்தனிக்கோஷடங்கிராம்புடனேசாதிபத்திரி-காமென்றசந்தனமுங்கடுகுரோணி சனஇலுப்பைப்பூநன்னாரிவிலாமிச்சைவேர்- வாமென்ற*இருவேலிகடுக்காய்தான்றி வற்றல்நெல்லிதிப்பிலியுமதுராமாமே, (௪௭0)

* இருவேலி-வெட்டிவேர்,

மதுரமென்றதிராட்சமொடுமுத்தக்காசு மைந்தனேபேரீச்சங்காய்வகைக்குச்-சதுரமென்றவிராகனெடைநிறுத்துக்கொண்டு சலியாமல்கல்வமிட்டுப்பழச்சாற்றாலே. அதிரம்போலரைத்திடுவாய்சாமம்நாலுஅப்பனேகடலைபோலுண்டைசெய்து- நதிவரண்டுசுரமிஞ்சியதிகமானால் நன்முலைப்பால்வெந்நீரிலீயநன்றே. (௪௭௧)

நன்றாகுஞ்சன்னிமுதல் தோஷமெல்லாம்நன்மையாம்பிள்ளைபிணிநலியும்தீரும்- பன்றாகும்நாவறட்சிபறக்கும்பாருபரிதிகண்டபனிபோலாம்நசவுள்ளோர்க்கு-நன்றாதபத்தியமாய்க்காருகாருகதிகெட்டால்வியாதியதாகித்துக்கொல்லும்-குன்றாகும் போகருடகடாட்சத்தாலேகுணமாகப் புலிப்பாணிகூறினேனே, (௪௭௨)

அக்கரசஞ்சீவிமாத்திரை

கூறுவேன்அக்கரசஞ்சீவிமாத்திரைகுணம்பெறவேசொல்லுகிறேன் குறிப்பாய்க்கேளு- கோறுகிறேன்அதிமதுரங்கோஷடஞ்சுக்குகுணமுள்ளசாதிக்காய்*கொடுக்காய்ச்சீரம்- ஊறுகிறலவங்கப்பட்டைதிப்பிலிமூலம் உத்தமனேகடுக்காயும்*அசமதாகம்- தேறுவேன்கொத்தமல்லிகஸ்தூரிமஞ்சள் திறமுள்ளபழம்புளியுஞ்சீனிகாணே. (௪௭௩)

* கொடுக்காய்-கொடுக்காய்புளி,

* அசமதாகம்-ஓமம்,

காணவே*அரத்தைரண்டு இந்துப்போடு கருஞ்சீரம்வகைவகைக்கு விராகனென்று - தோணவேமூலைப்பாலால்இரண்டுசாமந்தொகுத்திட வேதானரைத்துத் துவரைபோல-மானவேஉண்டைசெய்துநிழலுலர்த்தி மைந்தனே*குப்பியிலே அடைத்துக்கொண்டு - நாணவேநாவறட்சைநங் கைதோஷம்மலையில்லாச்சன்னிமுதல்சுரங்கள்போமே (சஎச)

* அரத்தைரண்டு-பேரரத்தை-சிற்றரத்தை,
* குப்பி-சீசாபுட்டி,

போகுமேமூலைப்பாலில்கொடுக்கநன்று புனிதமுள்ளஅநுபானந்த ன்னில்ஈவாய்-ஆகுமேபிள்ளைபிணி அநந்தம்போகும் அப்பனேபத்தியமா இருக்கச்செய்து-பாகமாயேமூநாள்கொண்டபின்னர் பாலகனேமறுவார ம்நீரைவாரு- சோகமாய்வியாதிகண்டுமருந்தைஈவாய்சொற்பெரியபோக ருடகடாட்சந்தானே, (சஎரு)

பிள்ளைகட்குபேதிமாத்திரை.

தானென்றபிள்ளைகட்கு*விரோசனந்தான் தயவாகச்சொல்லுகிறே ன்லவங்கமேலம்- மானென்றசன்னபட்டைமதுரங்கோஷடமமைந்தனே சண்பகத்தின்*மொட்டுத்தானும்-வானென்றவிராகனெடைநிறுத்துக்கொ ண்டுவாளமதுசுத்திசெய்துவிராகனென்று,தேனென்றபழச்சாற்றால்மூன் றுசாமம்தெளிவாகத்தானரைத்துசெப்பக்கேளே (சஎசு)

* விரோசனம்-பேதி,
* மொட்டு-மொக்கு,

கேளப்பாமிளகதுபோல்* குளிகைசெய்து கெடியாகநிழலுலர்த்தி ச்சிமிழில்வைத்து- கோளப்பாஇல்லையடாசர்க்கரையாதல்கொற்றவனேந ல்லவெல்லம்*கதலிதன்னில், நாளப்பாபிள்ளைபலமலமறிந்துநீயும் நன்ம ணியிலொன்றிரண்டுகல்கியப்பின் ஆளப்பாமிளகுநீர்சாதமீய்வாய்அந்தி யிலேசுக்குசீரகமுமாமே, (சஎஎ)

* குளிகை-மாத்திரை* கதலீ-வாழைப்பழம்.

கட்டுவாதிமாத்திரை

ஆமேதான் கியாழமிட்டுக்கொடுப்பாயப்பா அறையுறேன்கட்டுவா திதன்னைக்கேளு-தாமேதான்சாதிக்காய்சாதிபத்திரி தகமையுள்ளமாசிக் காய்கடுக்காய்ப்பூவும்- நாமேதான்சீரகமும்விடையங்கிராம்பு நலமுள்ள வெந்தயமும்அபினிதானும் கோமேதான்கசகசாவுங் கோரோசினையுங் கொற்றவனேவிராகனெடைநிறுத்துவாங்கே, (சஎஅ)

* விடையம்-அதிவிடையம்,

வாங்கியேமுலைப்பாலால் அரைத்துநீயும் வண்மையுள்ளமிளகது ...புண்டைசெய்து,தாங்கியேநிழலுலர்த்திப் பதனம்பண்ணுதாரணியி ...ணிவகையெல்லாம்போக, ஓங்கியேதேனதிலும் வெண்ணெயிலுங் ... தீதில்லாப்போகருடகடா ... (சஎகூ)

...

... சு ...ன்ரசசிந்தூரம்- வின்னமில்லாச்சுத்திசெய்துவகைவகைக்கு விராக ...டதானெடுத்துக்கல்வத்திட்டு- அன்னநடையின்னார்கள்*காமப்பா ...ப்பனேநாற்சாமம் அரைத்துவாங்கே (சஅ0)

சூதம்-இரசம் காமப்பால்-முலைப்பால்,

வாங்கியேகுன்றிமணிபோலுருட்டி வண்மையுடனிழலுலர்த்திவரி ...ளு-தீங்குற்றசூலைதிரிகிரந்திதோஷம் தின்றிடவேஏழுநாளில்தீர்ங் ...கும்-ஓங்கியேவந்துற்றசன்னிஓடும் ஒருநொடியில்சூடெழுந்துஓங் ...ம்-பாங்குற்றபத்தியங்களிச்சாபத்தியம் பண்பானபோகருடகடா ...ாலே. (சஅக)

சிறுபிள்ளைகட்குகட்டுவாதிமாத்திரை.

...ானென்றசாதிக்காய்தனைக்குடைந்துதன்மையுள்ளஅபினிபணவெ ...னிட்டு-கோனென்ற*குளவிந்தமறைத்துக்காய்மேல்கொற்றவனே ...ட்டுக்குணமதாக,மானென்றவேதுபுடமாகவிட்டு மைந்தனேகவச ...ாற்றிப்பின்பு-தேனென்றமுலைப்பாலால் அரைத்துமைபோல்தெ ...உழுந்ததுபோலுண்டைசெய்யே. (சஅஉ)

* குளவிந்தம்-மஞ்சள்

செய்தவுண்டைதனையெடுத்து முலைப்பால்தேனில்செயம்பெறவே ...ந்துவரத்திரும்நோய்கேள்- நொய்யவந்தரத்தகொட்டல்ரத்தபேதி ...குமுன்னேஓடிவிடும்நோய்திரும்பார், பய்யவந்தபேதிமுதல்கட்டு ...டும்பக்குவமாய்ப்பத்தியங்கள்பாகஞ்செய்வாய்-ஐயனொனும்போகரு ...ட்சத்தாலேஅன்பாகப்புலிப்பாணிபாடினேனே, (சஅங)

இரத்தகொட்டலுகுர்ம்-சீதபேதிச்கும்-சூரணம்,

அருளுவேன் *கற்கடகச்சிங்கியப்பா அட்வானகிராம்புடனே * கருவாப்பட்டை-உருளவேபிரட்டிசிறுவறுப்பதாக்கி உத்தமனேவகைவகைக்குவிராகனென்று-மருளவேசூரணித்துமைந்தாகேளு மயக்கமில்லைஆறுபங்காய்ச்செய்துகொண்டு- குருவானபோகனாநீதொழுதுஎத்தி கொடுத்துவிடுவெண்ணெயிலேகுலேந்துபோமே. (சஅச)

* கர்க்கடகச்சிங்கி-கடுக்காப்பூ.

* கருவாப்பட்டை-லவங்கப்பட்டை,

குழந்தைகளுக்கு சுரமுதலியதோஷங்களுக்கு அமிர்தசஞ்சீவிகுளிகை.

போமேதான் அமிர்தமென்றகுளிகைசொல்வேன் புகழுங்கோரோசனையும்ஏலந்தானும்-தாமேதான்அதிமதுரம்சண்பகப்பூ தலையானசாஸ்திரமாம்பேதியோடு - நாமேதான்வகைவகைக்குவிராகனென்று நலம்பெறவேகல்வத்திலன்றுயாட்டி-ஆமேதான்வெட்டிவேர் விலாமிச்சைவேரும் அட்வாகக்கியாழமிட்டுஅரைத்திடாயே. (சஅரு)

அரைத்திடுவாயிருசாமமானபின்பு அப்பனேகுன்றியைப்போலுண்டைசெய்து-நினைத்தனமாய்நிழலுலர்த்திநினைவாய்க்கேளு நீமகனேமுலைப்பாலில்துணிக்கிவைக்கில்- உரைத்துவந்தமாந்தமெட்டுதீர்ப்படுவன்றுன் உத்தமனேஅஸ்திசுரம்வெப்புந்தீரும்- மறைபுகழும்போகருட கடாட்சத்தாலே மகிழ்வாகப்புலிப்பாணிமனம்விட்டேனே. (சஅசு)

சிறுபிள்ளைகளுக்கு-காதில்சீட்வடிகிறதற்கு-ரவிதயிலம்,

விட்டதோர்சால்நண்டுவிராகன்பத்து வெள்ளுள்ளிகுளவிந்தம்விராகனேந்து-திட்டமுறவெள்ளைக்காக்கணஞ்சாற்றலே கிறமாகத்தானரைத்துத்தேங்காய்நெய்யில்-சட்டமுடன்தான்பிசைந்துரவியில்வைத்துச் சாதகமாய்மூன்றுநாளானபின்பு-இட்டமுடன்வடிகட்டியெடுத்துக்கொண்டு என்மகனேசெவியிலிடசீய்தான்போமே. (சஅஎ)

சிறுபிள்ளைகள்பெருக்கநெய்,

தானென்றதேராதபிள்ளைகட்கு தயவாகச்சொல்லுகிறேன் தண்ணீர்மிட்டான்-மானென்றசாரும்*வெண்மழியின்பாலும் மைந்தனே ஆவின்

பாலுந்தேங்காய்ப்பாலுந்-தேனென்றநூவினெய்கிறமாய்வாங்கி தேசிகனேவ
கைக்குப்படிகாலப்பா-சேர்னென்றசிவரியதுகற்கண்டோடுகொற்றவ
லமைந்துகொண்டுசேரே. (௬௮௮)

* வெண்மயி-வெள்ளாடு.

சேர்த்தபின்புஅடுப்பேற்றித்தீயைமூட்டு சிறுசளிமெழுகுபதஞ்சி
ம்போது-கோர்த்தெடுத்துவடிகட்டிக்கொண்டுதானும்கொற்றவனே
டிவீதங்கொடுத்தாயானால்- கார்த்திருந்தசணம்நீங்கிகரும்புபோலா
ட்டமுகும்பிள்ளைக்கு*களையுமுண்டாம்-பூத்தமறைபோகருட்சடாட்ச
லே புலிப்பாணிபுவிதனிலேபூட்டினேனே. (௬௮௯)

* களை-அழகு

குழந்தைகட்கு வாந்தி கண்டால்.

பூட்டுகிறேன்குழந்தைகட்குவாந்திகண்டால் பூவென்றகிராம்புமதி
யந்திப்பிலி-நாட்டுகிறேன்மயிலிறகுசுட்டசாம்பல் நன்றாகப்பொடி
துதேனில்சேர்த்து-ஊட்டவேவாந்தியதுஒழிந்துபோகும் உண்மை
கவறுதஉறுதிமெத்த-ஆட்டமிகும் போகருட்கடாட்சத்தாலே அன்
புலிப்பாணிஅறைந்திட்டேனே. (௬௯0)

குழந்தைகள் சிறங்குக்கு.

அறைபுறேனின்னமொருளண்ணெயப்பா அனல்மீமி குழந்தைகட்
ங்கமெல்லாம்-நிறையவேசொரிசிறங்குநின்றதானல் நிலவரமாயாம
கெண்ணெயோடு-மறையானமேனியுடன்மணித்தக்காளி மைந்தனே
க்கற்றன்வகைப்படிக்கால்- குறையாமல்மூக்குரட்டை யரைத்தசாங்
ட்டிடுவாயெலுமிச்சம்பழத்தின்வாறே. (௬௯௧)

வாறகக்காச்சிவடித்தெடுத்துக்கொண்டு வகையாகக்சுரண்டிமுறை
டுப்பாயப்பா-நேராகப்பத்தியந்தானிச்சாபத்தியம் நிச்சயமாயைந்து
ளாழுநாளாம்-சிராகத்தலைமுழுகிவருவாராகில் சிறுசிறங்கும்பெருசிற
ம்கில்லாதோடும்- பேராகப்போகருடகடாட்சத்தாலே பேசினேன்பு
பாணிபேசினேனே. (௬௯௨)

சிறங்குக்குமேல்பூசுந்தயிலம்.

பேசுகிறேன்மேல்பூசுந்தயிலமொன்று *பெரியாம்பல்கிழங்குடனே
ங்கத்தாரி-மாசறவேஷியடைக்கெடைதானெடுத்துக்கொண்டு மைந்த

னே அவுரிச்சாற்றன்னாலாட்டி-நாகமென்றநிம்பயெண்ணெய் தன்னில்கூட்டி நான்குநாள்பூசிவரசிறங்குபோகும்-தேசிகனார்போகருட் கடாட்சத்தாலே தெளிவாகப்புலிப்பாணிபாடினேனே. (சகூரு)

* பெரியாம்பல்-அல்லி.

* செங்கத்தாரி-சுருள்பட்டை

பிள்ளைபெறமாட்டாதவர்க்கு.

பாடியேபிள்ளைவெளிகாணுதபேர்க்குப் பண்பானகீழ்க்காய்நெல்லிமூலம்-வாடியேபோகாமல்வளையமாடி வசமானஇடக்கால்பெரு விரலிற்போட-நீடியேபிள்ளைவெளிகாணுமப்பா நினைவாகஇன்னமொருவேளாக்கேளு-சூடியேமுன்னைவேர்தனையெடுத்து சுரபியெனும்பசுவின்பால்தனிலரைத்தே. (சகூச)

அரைத்தெடுத்துஉள்ளுக்குக்கொடுத்தால்பிள்ளை அப்பனேகீழ்விழுந்துஅழுகும்பாரு-மறைத்தபொருளென்றுநீமயங்கவேண்டாம் மகாகோடிபுண்ணியங்களுனக்குண்டாகும்-துரைத்தனமாய்நீயலைந்து திரியவேண்டாம் துய்யமெனும்நூல்களெல்லாந்துணிந்துபாரு-உரைத்தகுரு போகருடகடாட்சத்தாலே உரைத்திட்டேன்புலிப்பாணியுலகில்தானே.(சகூரு)

கற்றாழைநாற்றந்தீரக்கூட்டு

உலகினிலேமானிடர்க்குக்கற்றாழைநாற்றம் ஓடிவிடச்சாந்தொன்றுரைக்கக்கேளு-*நல்நாரிகரந்தையுடவேருங்கூட்ட நன்னாரி வேருடனேமுத்தக்காசுங்-குலமிலகுங்கஸ்தூரிமஞ்சள்தானுங் கூட்டியேவகைவகைக்குவிராகனேந்து-கலகமிலையரைத்ததனைக்*கமுகட்டில்பூச கண்டோடுங்கற்றாழைநாற்றமெண்ணே. (சகூசு)

* நல்நாரி-சிவகரந்தை. * கமுகட்டில்-அக்குள்.

தலைப்பேனுக்குமாரணம்.

எண்ணவேதலையினுள்ளபேன்கள்சாக எடுத்துரைப்பேன்*சூதமொருகழஞ்சிவாங்கி-நண்ணவேமேனியின்சாற்விட்டரைட்டி நன்னூலில்தான்புரட்டிநவிலக்கேளு-திண்ணவேசிகைபில்சிக்கம்போல்சொருக சிரசினுள்ளபேன்களெல்லாஞ்செத்துப்போகும் - கண்ணவேபோகருட்கடாட்சத்தாலேகலையறிந்துபுலிப்பாணிகாட்டினேனே. (சகூஎ)

* சூதம்-இரசம்.

காட்டினேன்முப்பூவேகலனில்லாமல் கண்டறிந்துசெய்தொழிலில்கலந்துகொள்ள-நாட்டினேன்கபடமொன்றுமில்லையப்பா நன்மையுடன்நீயாடநாதனென்பார்-பூட்டினேன்சிவனமுத விதிலேயாகும் புண்ணியனேவாதமொடுவைத்தியமாட-காட்டினேன்போகருடகடாட்சத்தாலே கனமாகப்புலிப்பாணிபலையில்தானே. (சகூஅ)

நூறஞ்சுருக்குயபு.

[illegible]லேபதினுறும்இருபத்தைந்துங் கனமானவைம்பதுட னூறும் [illegible]லேசண்முகத்தின்பூசைமார்க்கம் நீமகனேசாலமிருநூறும்பா [illegible]லபலதிரட்டுமுன்னூறப்பா மைந்தனேசோதிட்முமுன்னூறப் [illegible]-குளி[illegible]லேகொக்கோகமுன்னூறுதானுங் குருவானபோகருட் கடாட் [illegible] (சகூகூ)

வைத்தியர்க்குபுத்திகூறல்.

[illegible]தான்பண்டிதரோ அறையக்கேளுஆதனாயிலெளியோர்க்கு அவி [illegible]ாமேதானங்மிட்டுவஸ்திரமீந்து தயவாகத்தன்னுயிர்போலவ [illegible]-தீமேதான்சேராமல்புண்ணியவானுய் திர்க்கமுள்ளவைத்திய [illegible]வாழ்வாய்-நாமேதான்போகருடகடாட்சத்தாலே நலமாகப்புலி [illegible]ன்றிட்டோமே. (ரூ00)

வியாதியஸ்தனுக்குபுத்திகூறல்

[illegible]றிட்டோம்புவிதனிலே வைத்தியமார்க்கம் நன்றுகச்சொல்லி [illegible]ிந்நூல்வேண்டும் - பவின்றிட்டநோயாளர்வைத்தியோர்க்குப் [illegible]ந்தொழுதேற்றித்தாம்பூலமீந்து-இவின்றிட்டமவையெல்லாமவர் [illegible]ல்லி இதம்பெறவேசெய்தபின்புஅவிழ்தங்சொள்வாய-கவின்றி [illegible]ருட்கடாட்சத்தாலே காசினியில்புலிப்பாணியந்நூறுமுற்றே.()

புலிப்பாணிமகாமுனிவர்-அருளிச்செய்த

வைத்தியம்-ரூ00-முற்றிற்று.